2013 ஏப்ரல் 18]

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள்.*

திரு. ப. தன்சிங்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பல திட்டங்களை அறிவித்துக்கொண்டிருக்கிற இந்த நல்ல வேளையில், பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்று சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 266, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

266—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

__8867__—திரு. ச. பழனிச்சாமி:

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம், புளியம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஏற்கெனவே பெறப்பட்ட கருத்துருவில் வாய்ப்பில்லையென்று தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடனும், பரிவுடனும் பரிசீலனை செய்து, 2013-2014 ஆம் கல்வியாண்டில் பெறப்பட்ட கருத்துருவில், அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட 4-4-2013 ஆம் நாளிட்ட கருத்துருவில் அறிவிக்கப்பட்டுள்ளது. வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியம்,

புளியம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பொது மக்களுடைய பங்குத்தொகை ரூ.2.00 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் போதுமான இடவசதி உள்ளதென்றும் தெரிவித்துள்ளபடியால், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த பரிந்துரை செய்துள்ளார் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி, செம்மலைத் தலைவி, காவேரித் தலைவி, இன்றைய தமிழகத்தினுடைய தலைவி, நாளைய பாரதத்தினுடைய தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காற்றின் சிறப்பு தென்றல் வீசுவது, மேகத்தின் சிறப்பு மழை தருவது, மரத்தின் சிறப்பு நிழல் தருவது, கனியின் சிறப்பு சுவை தருவது, படையின் சிறப்பு வெற்றி தருவது, வெற்றியின் சிறப்பு மகிழ்ச்சி தருவது, கடவுளின் சிறப்பு அருள் தருவது, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறப்பு நல்லாட்சி தருவது. அத்தகைய சிறப்பு வாய்ந்த அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்து, எல்லாத் துறைகளுக்கும் முதன்மைத் துறையாகவும், முன்னோடித் துறையாகவும் விளங்கும் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கி, கல்லாமையை இல்லாமையாக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியிலே, வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள புளியம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியை தரம் உயர்த்துவதற்குத் தேவையான பொது மக்களுடைய பங்குத்தொகை, இடவசதி மற்றும் இயக்குநர் அவர்களின் பரிந்துரை அனைத்தும் இருக்கிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த ஆண்டு தரம் உயர்த்தப்படுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 18]

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டு அந்தப் பள்ளி தரம் உயர்த்துவதற்கான பரிசீலனையில் உள்ளதென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் தரம் உயர்த்துவதற்கான பரிசீலனையில் உள்ளதென்று கூறிய மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 267, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

267—

ஆரம்ப சுகாதார நிலையம்

***21657—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், நூலஅள்ளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.